# கியிரோங் (Gyirong or Kyerung)




**வசிப்பிடம்:** குறைவாகவே அறியப்பட்ட கியிரோங் மக்கள் திபெத்-நேபாள எல்லையின் இருபுறங்களிலும் எவரெஸ்ட் சிகரத்தின் அருகாமையில் வசிக்கின்றனர். தென் திபெத் மற்றும் சீன-நேபாள எல்லையில் 6,113 கியிரோங் மொழிபேசும் மக்கள் இருப்பாதாகக் கி.பி. 1995 ல் க்ளோபல் இவாஞ்சலைஷேசன் மொவ்மென்ட் (Global Evangelization Movement) அனுமானித்தது. இத்தோடுகூட 4300 கியிரோங்க்கள் நேபாளில் குறிப்பாக நேபாளின் ரசுவா (Rasuwa) மாவட்டத்திலுள்ள ரசுவா காரி (Rasuwa Gari), ப்ரித்திம் (Briddhim), தாங்செத்(Thangjet), ஸ்யாப்ரு (Syapru) மற்றும் ஸ்யாப்ரு பேசி (Syapru Besi) கிராமங்களில் வசிக்கின்றனர். ஒரு குறிப்பிடத்தக்க எண்ணிக்கை நேபாளின் தலைநகரமாகிய காத்மண்டுவிலும் உண்டு.

**அடையாளம்:** கியிரோங் மக்கள் சீனாவிலும் நேபாளிலும் திபெத்தியர்கள் எனக் கருதப்படுகின்றனர்; இருந்தும் இவர்கள் தங்களுடைய சொந்த மொழியைப் பேசுகின்றனர். இது மற்ற திபெத்திய மொழி பேசுபவர்களால் புரிந்துகொள்ளமுடியாத மொழியாகும். நேபாளில் உள்ள 60,000 திபெத்தியர்கள் மத்தியில் கியிரோங்க்கள் எண்ணிக்கை குறிப்பிடத்தக்கது.

**மொழி:** கியிரோங், திபெத்திய-பர்மிய மொழிக் குடும்பத்தின் போதி (Bodic) துணைப் பிரிவை சேர்ந்ததாகும். இம்மொழி தொல்பொ (Dolpo), லோமி (Lhomi) மற்றும் லோபா (லோபோ) மொழிகளோடு 68 சதவீதமும் மத்திய திபெத்திய மொழியோடு 65 சதவீதமும் ஹெலம்பு ஷெர்பா (Helampu Sherpa) மொழியோடு 63 சதவீதமும் ஒத்துப்போகிறது.

**வரலாறு:** 7 ஆம் மற்றும் 8 ஆம் நூற்றாண்டுகளில் திபெத்தியசாம்ராஜ்யம்விரைவானவளர்ச்சியைக் கண்டது. திபெத்தின் ஆட்சிப்பகுதி விரிவடைந்து காஷ்மீர், சீனா, துர்கிஸ்தான், சிக்கிம், பூட்டான், நேபாள் மற்றும் வட பர்மா வரை பரவியது. கி.பி. 1788 ல் நேபாளின் கோர்கா (Gorkha) இராணுவம் தாக்குதல் செய்தபோது திபெத்தியர்கள் சீனாவின் உதவியை நாடினார்கள். இதன்பின் திபெத்தில் சீனர்களுடைய ஆதிக்கம் மிகவும் அதிகமானது. சிக்கிம், பூட்டான் மற்றும் நேபாள் பிரிந்து தனிநாடுகளாயின. நேபாள் திபெத்தைத் தாக்குதல் செய்யப் பயன்படுத்தின வழிகளில் இவர்கள் வசிக்கும் பகுதியின் வழி முக்கியமானதாயிருந்தது.

**மதம்:** கியிரோங் மக்கள் மற்ற திபெத்தியர்களைப்போலவே ஆர்வத்தோடு திபெத்திய புத்தமதத்தைப் பின்பற்றுகின்றனர். இவர்கள் எல்லாத் திபெத்தியத் திருவிழாக்களையும் மிகுந்த பரவசத்துடன் கொண்டாடுகின்றனர் மற்றும் தலாய் லாமாவை தங்களுடைய ஒப்பற்ற ஆவிக்குரிய தலைவராகக் கருதுகின்றனர். திபெத்தின் தொடர்பற்ற இடங்களில் வசிக்கும் கியிரோங்க்கள் அங்கு வரும் நபர்களைத் தலாய் லாமாவின் புகைப்படம் இருந்தால் தரும்படி கேட்கின்றனர்.

**கிறிஸ்துவம்:** அறியப்பட்ட கியிரோங் கிறிஸ்தவர்கள் திபெத்திலேயோ நேபாளிலேயோ கிடையாது. இந்நாட்களில் எவ்ரி ஹோம் பார் க்ரிஸ்ட் (Every Home For Christ) போன்ற ஊழிய நிறுவனங்கள் நேபாளில் சுவிசேஷத்தை அறிவிக்கப் பெரிய அளவிலான திட்டங்களை ஆரம்பித்துள்ளன. இதன் விளைவாகச் சில கியிரோங்க்கள் சுவிசேஷத்தைக் கேட்கும் வாய்ப்பை அடைந்துள்ளனர்; இருந்தும்கூட ஒரு சிலர் மட்டுமே அதின் அன்பைப் புரிந்துகொண்டுள்ளனர். இந்த இனம் இவர்கள் மத்தியில் தங்கியிருந்து அன்போடும் பொறுமையோடும் சுவிசேஷத்தை வார்த்தையிலும் செய்கையிலும் அறிவிக்கும் ஊழியர்களின் அவசியத்தில் உள்ளது. கி.பி. 1932 ல் கிழக்குத் திபெத்தில் இரத்த சாட்சியாக மரித்த அமெரிக்காவைச் சேர்ந்த மிஷனெரி வில்லியம் இ சிம்ப்சன் (William E Simpson) போன்ற பணியாளர்கள் இங்கு தேவை. சிம்ப்சன் தன் வாழ்க்கையைப்பற்றி எழுதும்போது இவ்வாறு சுருக்கமாக எழுதினார் “தனிமை, மன வருத்தங்கள், தளர்ச்சி மற்றும் வலிகள், நீண்ட பாதையின் குளிர் மற்றும் சோர்வு, இருள் மற்றும் மனச் சோர்வு, மற்றும் எல்லா மனித இழப்புகள் ஆகிய இந்த எல்லாச் சோதனைகளும் இந்தப் பெரும் மகிழ்ச்சியின் நற்செய்தியை அறிவிப்பதால் உண்டாகும் மகிழ்ச்சியோடு ஒப்பிடத் தகுதியற்றவை எனக் கருதப்படுமல்லவோ?”




**Population:**
11,100 (2000)
13,700 (2010)
16,900 (2020)
**Countries:** China, Nepal
**Buddhism:** Tibetan
**Christians:** none known

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Kyirong, Gyirong
**மக்கள்தொகை:** 6,113 in China (1995, Global Evangelization Movement); 4,300 in Nepal (2002, Joshua Project II)
**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, ஹிமாலய, திபெத்திய-கனௌரி, திபெத்திய, மத்திய திபெத்திய மொழி
**மொழி வழக்குகள்:** 0
**திபெத்திய புத்தமதம்:** 100%
**கிறிஸ்துவம்:** 0%
**வேதாகமம்:** இல்லை
**இயேசுதிரைப்படம்:** இல்லை
**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை
**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை
ROPAL **குறியீடு :** KGY

### கிறிஸ்துவத்தின் நிலை

